**18.11.2025.**

**O.S.No.134/2022**

**வா.சா.1 : ஜெயராமன்**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> :-**

5) மேற்படி தாவா சொத்து தான செட்டில்மெண்ட் மூலம் பாதிய்ப்பட்டது என்றபதற்கா அசல் ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி அசல் ஆவணத்தை தனி நபரிடம் கொடுத்து கடன் பெற்றதாக சொல்லப்பட்டுள்ள நிலையில் அது யாரிடம் கொடுக்கப்பட்டது என்ற விவரத்தை என்னுடைய பிரமாண பத்திரத்தில் சொல்லவில்ல என்றால் சரிதான். மேற்படி தான செட்டில்மெணட் சொத்து எனது அப்பாவிற்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணம் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி சொத்து எனது தாத்தாவின் பூர்வீக சொத்து. எனது தாத்தா பெயரில் உள்ள பட்டா எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6) எனது தாத்தாவிற்கு 2 மகன்கள். எனது தாத்தா பெயர் ராமன். அவருக்கு சின்னப்பையன் மற்றும் குள்ளன் என்ற இரு மகன்கள். அதற்குண்டான வாரிசு சான்றிதழ் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி தாவா சொத்தில் ராமன் என்பவருக்கு ஏதேனும் பாகப்பிரிவினை நடந்து உள்ளதா என்றால் தெரியாது. லட்சுமணன் மற்றும் சின்னதம்பி ஆகியோர் பெரிய தாத்தாவின் பிள்ளைகள். எனது பெரிய தாத்தா பெயர் வடமலை. மேற்படி தாவா சொத்து எனது பெரிய தாத்தா, சின்ன தாத்தாவிற்கு பாத்தியபட்டு இருந்ததற்கான ஆவணங்கள் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்து எனது அப்பா பெயரில் இருந்ததற்கான அடங்கல் முதலிய ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை.

7)எனக்கு படிக்க தெரியாது. வா.சா.ஆ.1 ல் ஆவணத்தில் உள்ள வட்டாட்சியர் சான்று கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சான்று நான் வருவாய் துறையில் வாங்கி கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

வருவாய் துறை அதிகாரிகள் யாரும் எனது நிலத்திற்கு வந்து அளந்து காட்டவில்லை என்றால் சரிதான். அதற்கு படி எதுவும் கட்டவில்லை. வா.சா.ஆ.1 ல் இணைக்கப்பட்ட வட்டாட்சியர் சான்று போலியாக இணைக்கப்பட்டுள்ளது என்றும் அது உண்மையானதல்ல என்று சொன்னால் சரியல்ல. எனது தாத்தாவிற்கும் பெரிய தாத்தாவிற்கும் பாகம் பிரியாத நிலையில் எனது அப்பா தான செட்டில்மெண்ட் ஆவணத்தை உன் பெயரில் எழுதுவதற்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. சட்டப்படி செல்லாத ஒரு ஆவணத்தின் அடிப்படையில் நான் எவ்விதமான உரிமையும் நான் கோர முடியாது என்றால் சரியல்ல. 29.10.1982 ம் தேதி சர்வே எண். 152/2 ல் எனது அப்பா நான் மைனராக இருந்தபோது பாதுகாவலராக காண்பித்து 1 ம் பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுத்துவிட்டார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

8) எனக்கு மேற்படி விவரம் தெரியும் என்றும் வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதிகள் தான் இருக்கின்றனர். நான் வழக்கிற்காக தாவா சொத்தில் பிரதிவாதிகள் சட்ட விரோதமாக உள்ளதாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. இந்த தாவா சொத்தில் முத்துசாமி, ஆண்டி, பரமசிவம் ஆகியோர் இருக்கிறார்கள் என்றால் சரிதான். மேற்படி நபர்களை இந்த வழககில் தரப்பினராக சேர்க்காததால் இந்த தாவா சொத்து குறித்து உரிய நபர்களை சேர்க்காத காரணத்தினால் வழக்கு பாதிக்கத்தக்கது என்றால் சரியல்ல. என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் 13.03.2022 ம் தேதி பிரதிவாதிகள் மிரட்டியதாக நான் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லவில்லை. வா.சா.ஆ.11 ல் காவல் நிலையத்தில் நான் நேரடியாக புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அந்த புகாரை நான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. நான் உண்மையிலலே காவல் நிலையத்திற்கு சென்றிருந்தால் அந்த புகாரை நீதிமன்றத்தில் ஒப்படைத்திருப்பேன் என்றும் நான் புகார் கொடுக்கவில்லை என்பதால் தான் நான்

அந்த புகாரை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சென்று புகார் கொடுத்து அதை நீதிமன்றத்தில் பார்த்துக்கொள் என்று சொல்லி விட்டார்கள்.

வழக்கறிஞர் வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.11.18 17:37:29 +0530

**Subordinate Judge, Attur.**